**O.S.No.93/2018**

**PW2 :** **நாராயணன்** தேதி 02.02.2026

**வாசா2 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் பி.காம்., படித்து இருக்கிறேன். நகை கடை தொழில் செய்கிறேன். கதவு எண்.30, பொன் வீதி, ஈரோட்டில் கடை வைத்திருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள பக்கம் 4ல் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். பி.வா.சா.ஆ.1 பத்திரத்தில் முதலில் ரேகை வைத்துள்ளவர் என் தாயார் செல்லம்மாள் என்றால் சரியல்ல. 2வது தரப்பினராக கையெழுத்து செய்துள்ள விஸ்வநாதன் என்னுடைய மாமனார் என்றால் சரிதான். 3வது தரப்பினராக கையெழுத்து செய்துள்ளவர் 4ம் வாதி வரதராஜ் என்னுடைய சித்தி மகன். 4வது தரப்பினராக கையெழுத்து செய்துள்ள இவ்வழக்கின் 2ம் வாதி சம்பூரணம் என்னுடைய சித்தி. 5வது தரப்பினராக கையெழுத்து செய்துள்ளவர் என் சித்தி லட்சுமி. மேற்படி ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்திட்டுள்ளதில் என்னுடைய தொழில் விலாசத்தை தான் முகவரியாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் என் சித்தி 1ம் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். நான் இவ்வழக்கில் என் தாயார் செல்லம்மாளுக்கு வாரிசாக பின்னிட்டு சேர்க்கப்பட்டேன். இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது சொல்லப்பட்டுள்ள விபரங்கள் என் தாயாருக்கும், அவரது சகோதரிகளான வாதிகளுக்கும் தான் தெரியும், எனக்கு அப்போது தெரியாது. ஈரோடு கிராமத்தில் முத்தம்பாளையம் பூர்வீக சொத்து அரசால் 1990ல் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட பூமியை ஒட்டியே என் தாத்தா முத்துகவுண்டருக்கு பாத்தியப்பட்ட பூமி இருந்தது என்றால் சரிதான். அந்த பூமியும் அரசால் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட பூமிக்குண்டான இழப்பீட்டு தொகையை என் மாமா மகன் சுந்திரமூர்த்தி பெற்றுக் கொண்டார் என்றால் அது எனக்கு தெரியாது. இழப்பீட்டு தொகை அதிகம் கோரி என் மாமா மகன் சுந்திரமூர்த்தி மனு செய்திருந்தார் என்றால் சரிதான். நானும் அதிகப்படியான இழப்பீட்டு தொகை கோரி மனு செய்திருந்தேன். நானும், என்

மாமா மகன் சுந்திரமூர்த்தியும் சேர்ந்து ஒரே வழக்கறிஞர் மூலம் மனு செய்திருந்தோம் என்றால் சரியல்ல , நான் தனியாக வழக்கறிஞரை நியமித்து இருந்தேன். முத்துக்கவுண்டர் ஈரோட்டில் வாங்கிய சொத்தை அரசு ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்தை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி சொத்துக்கள் முத்துக்கவுண்டர் எழுதி வைத்த உயில்படி சுந்திரமூர்த்திக்கு பாத்தியம் இருப்பது தெரியும் என்றும், அது தெரிந்ததால் தான் ஆர்ஜிதம் செய்யும் போது அரசால் கொடுக்கப்பட்ட தொகை குறித்து நான் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரியல்ல, முத்துக்கவுண்டர் இருக்கும் வரை உயில் எதுவும் எழுதவில்லை என்று சொல்கிறேன். நான் சாட்சி கையெழுத்திட்டுள்ள பி.வா.சா.ஆ.1 ல் முத்துக்கவுண்டர் உயிருடன் இருக்கும் போது 01.02.1982 ல் சுந்திரமூர்த்திக்கு உயில் எழுதி வைத்து அவர் காலமான பின்னர் மேற்படி உயில் அமுலுக்கு வந்து மேற்படி விஸ்வநாதன் மகன் சுந்திரமூர்த்தி தான் ஒரே வாரிசு, எல்லா சொத்துகளும் அவர் சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்ற வாசகங்கள் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு ஆமாம் அவ்வாறு தான் எழுதப்பட்டுள்ளது என்றும், ஆனால் படித்து பார்க்காமலேயே கையெழுத்து போட்டதாகவும் வெற்று தாளில் கையெழுத்து வாங்கியதாகவும் கூறினார். சாட்சிகள் கையெழுத்து மற்றும் தரப்பினர்களின் கையெழுத்து ஆகியவை நோட்டரி வழக்கறிஞர் முன்னிலையில் போடப்பட்டது என்றால் சரியல்ல, என் கடையில் வைத்து தான் நான் வெற்று தாளில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன்., என் தாயார் ரேகை வைத்தது எனக்கு தெரியாது. முத்துக்கவுண்டர் எழுதி வைத்த உயில்படி எல்லா சொத்துக்களும் சுந்திரமூர்த்திக்கு பாத்தியம் என்பது எனக்கு தெரியும் என்றும், அதனை ஒப்புக் கொண்டு என்னுடைய பிரமாண பத்திரம் பி.வா.சா.ஆ.1 ல் எழுதி கொடுத்துவிட்டு அந்த சங்கதிகளை மறைத்து முத்துக்கவுண்டர் உயில் எழுதவில்லை என்றும், எல்லா சொத்திலும் பங்கு இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முத்துக்கவுண்டர் இறக்கும் போது என்னுடைய வயது என்ன என்றால் 20 வயதிற்குள் இருக்கும். முத்துக்கவுண்டர் என்ன தொழில் செய்தார் , அவருடைய வருமானம் என்ன என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் விவசாயம் மட்டும் தான் செய்து வந்தார். மரக்கடை வைத்திருந்தார் என்றால் சரியல்ல. சந்தைக்கு வண்டி ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. குத்தகைக்கு பூமி ஓட்டி

வந்தார் என்பது தெரியுமா என்றால் அது தெரியும். உயில்படி சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியம் என்று விஸ்வநாதன் மீது வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பாணை பெற்றுள்ளார் என்பதை இவ்வழக்கிற்கு பின்னிட்டாவது தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன். அ.வ.எண்.282/1987 வழக்கில் சாட்சிகள், பத்திர எழுத்தர் என்ன சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பதை தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. மேற்படி வழக்கில் 1 ஏக்கர் 34 செண்ட் தான் பாகப்பிரிவினை ஆகாத சொத்து என்பது தெரிந்து கொண்டீர்களா என்றால் இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது தெரிந்து கொண்டேன். அந்த வழக்கில் விஸ்வநாதனுக்கு 67 செண்டும், சுந்திரமூர்த்திக்கு 67 செண்டும் பிரிவினை செய்து ஒதுக்கப்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்பதையும் இவ்வழக்கிற்கு பின்னிட்டு தெரிந்து கொண்டேன் , விஸ்வநாதன் வாங்கிய கடனை கட்டாததால் சொத்து அரசால் ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டது என்பது தெரியுமா என்றால் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை. அவ்வாறு ஏலத்திற்கு கொண்டு வரக்கூடாது என்று 1ம் பிரதிவாதி அ.வ.எண்.510/1987 வழக்கு தொடர்ந்து தீர்ப்பானது என்பதை இவ்வழக்கிற்கு பின்னிட்டு தெரிந்து கொண்டேன். அ.வ.எண்.510/1987 ல் தீர்ப்பின் பேரில் மாவட்ட நீதிமன்றத்திலும், இரண்டாவது மேல்முறையீடு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததில் விசாரணை நீதிமன்றத்தில் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டது என்பதை தெரிந்து கொண்டீர்களா என்றால் இவ்வழக்கிற்கு பின்னிட்டு தெரிந்து கொண்டேன். மேற்படி விபரங்கள் தெரிந்து கொண்ட பின்னர் தான் பி.வா.சா.ஆ.1 ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண்.282/1987 வழக்கில் விஸ்வநாதனுக்கு பிரிந்த 67 செண்டில் தான் 5ம் வாதி ஜோதி காயத்திரிக்கு மட்டும் தான் பங்கு உண்டு என்று சொன்னால் சரியல்ல. என் தாயாருக்கோ, அவரது சகோதரிகளான 2, 3 வாதிகளுக்கோ மேற்படி சொத்தில் பங்கு இல்லை என்றும், ஜோதி காயத்திரிக்கு மட்டும் தான் பங்கு உண்டு என்று சொன்னால் சரியல்ல. உயில்சாசனப்படி 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதில் 1ம் பிரதிவாதி வருவாய்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. என் தாத்தா முத்துகவுண்டருக்கு பூர்வீக சொத்து எவ்வளவு விஸ்தீரணம் , சுயார்ஜித சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்றால் பூர்வீகம் 4 ஏக்கர் உள்ளது, கிரயம் வாங்கிய

சொத்து எவ்வளவு என்று தெரியாது. என் தாயார் இவ்வழக்கின் வழக்குரையில் முத்துகவுண்டருக்கு பூர்வீக சொத்து எவ்வளவு பாத்தியம், கிரயம் வாங்கிய சொத்தில் எவ்வளவு பாத்தியம் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியிருக்கிறார். விஸ்வநாதன் குடும்பத்தை கவனிக்காமல் மனம் போல் வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு அவர் மனம் போல் வாழ்ந்து வந்ததால் தான் அவரது மனைவி குழந்தைகளை அழைத்து கொண்டு அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. அதனால் தான் முத்துகவுண்டர் அவர் உயிருடன் இருக்கும் போதே அவரது பேரனான 1 ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எத்தனை இடத்தில் உள்ளது எவ்வளவு விஸ்தீரணத்தில் உள்ளது என்பது தெரியுமா என்றால் 5 இடத்தில் உள்ளது. ஒவ்வொரு இடத்திலும் உள்ள சொத்துக்களின் விஸ்தீரணம் சொல்ல முடியுமா என்றால் அது சரியாக தெரியாது. அதன் செக்குபந்தி விபரங்கள் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. என் தாயார் அனுபவித்து வந்ததாகவும், அதன் பின்னிட்டு நான் அனுபவித்து வந்ததாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தாத்தா முத்துகவுண்டர் அவர் உயிருடன் இருக்கும் பொழுதே அவருக்கு பாத்தியமான 271/4 செண்ட் ஆர்.சி.பழனியப்பன் கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் சொத்தை அனுபவிக்கவில்லை என்பதால் தான் எவ்வளவு விஸ்தீரணம் கிரயம் கொடுத்தார் என்பது எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. என் தாத்தா கிரயம் கொடுத்த 27-1/4 செண்ட்டை வழக்கில் காட்டியிருக்கிறேன் என்றால் சரிதான். ஆர்.சி.பழனியப்பன் தான் கிரயம் வாங்கிய 27-1/4 செண்ட்டை 1 ம் பிரதிவாதி சுந்திரமூர்த்திக்கு உயில் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. சொத்தை அனுபவித்து இருந்தால் மேற்படி விபரங்கள் எனக்கு தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 26 செண்ட்டை சுந்திரமூர்த்தி 15.05.2010 ல் அவரது மனைவி ஜெயந்திக்கு ஒரு செட்டில்மெண்ட் எழுதி வைத்திருக்கிறார் என்றால் இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது தெரிய வந்தது. ஜெயந்தி பேரில் இருக்கும் சொத்துக்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஜெயந்தியும் தரப்பினராக சேர்க்கவில்லைஎன்றும், சொத்துக்களையும் வழக்கில் சேர்க்கவில்லை என்றும் அதனால் இவ்வழக்கு பாதிக்கப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல.

வா.சா.1 சம்பூரணம் சாட்சியாக விசாரிக்கப்பட்டு அவர் உண்மை சங்கதிகளை ஒப்புக் கொண்டுவிட்டதால் அதை மறைப்பதற்காக நான் இவ்வழக்கில் வா.சா.2 ஆக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வயது 60. என் பிரமாண வாக்குமூலத்தில் என் வயது 55 என்று சொல்லியிருக்கிறேன். எனக்கு வழக்கு விபரம் தெரியாது என்றும், யார் சொத்தில் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்பது தெரியாது என்றும், பிரமாண பத்திரிக்கையில் உள்ள விபரம் தெரியாது என்றும், வா.சா.1 சம்பூரணம் கொடுத்த பிரமாண வாக்குமூலத்தில் என்ன சங்கதிகள் இருந்ததோ அதை அப்படியே நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.